உ

மீனாட்சியம்மன் துணை.

மதுரை மீனாட்சியம்மன்

உயிர்வருக்கமாலை.

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

உ பதேச ரத்ன மாலை.

உ

கணபதிதுணை.

மதுரை மீனாட்சியம்மன்

உயிர்வருக்கமாலை.

அஞ்செழுத்தானநீ ஓரெழுத்துருவமாய் அரனோடிருந்தவ வளும்நீ, ஆறுசாஸ்திரம்நாலுவேதக் கலைக்கியானம் அன்பத் தோராட்சரமுநீ, கஞ்சமலர் மாதுநீ வெஞ்சமரிவாணனைக் கண் டதுண்டஞ்செய்தவளுநீ, காரணிக்கலையேறு வீரமாங்காளிநீ கைலாசக பாவிநீ, பஞ்சகோணத்திருந்தரம்வளர்ப்பவளுநீ பாவ ங்கள்தீர்ப்பவளுநீ பாவாணர்பிணிதீரஉதவிசெய் மகம்மாயிபகவ திகௌமாரிநீ, வஞ்சகத்திருடாகளை துஞ்சிடவறுத்ததிறமாலின் சகோதரியும்நீ, வருமடியர்குறைதீரவரமருளும் அதிகாரமது ரைமீனாட்சியுமையே 1

ஆதியாய்அந்தமாய் சோதியாய்வெளியுமாய் ஆரூபதத்துவ முமாய், அகிலமாய் அண்டமாய்சப்தசாகரமுமாய் அணுவாதி மகமேருவாய் நீதியாய்நெறியுமாய் நிலையுமாய்கலையுமாய் நினை வுமாய்கனவுமாகி, நேசமாய்பாசமாஉணவற்றவடிமைக்கு நெஞ் சுக்குளொருதெய்வமாய், பேதியாதேயிருந்தடியைபிணிதீத்னை ப்பெற்றவளுநீயாகுமே பிஞ்சமதிமஞ்சணிசடைச்சியேசிவனோ

பேசிநட மாடுகின்ற, வாதியேமுக்கண்ணியபிராமிசிவகாமி வல்லிதிர்ச்சூலிநீலி, வருமடியர்குறைதீர வரமருளும்அதிகாரமதுரைமீனாட்சியுமையே. 2

இரவலர்க்கீயாத வறிவிலாமூடரை விதங்கர்தகல்நெஞ்சரை, எவ்வுயிருந் தன்னைப்போல் நினையாதகசடரைஈனங்கள்செய்பவர்களை, பரகதியை நினையாதசற்சனர்கள் முன்சென்றுபாடாமலுன்புகழையே, பத்தியாய்நித்தமும் துதிக்கவேயருள்தரும் பரமகலியாணிநீயே, கங்காளிமகுடசங்காரி ஓங்காரிகாரணி பரிபூரணி, வரமருள்புரந்தரி நிரந்தரிவல்லியாய் வடிவாகநின்றவுமையே, வருமடியர்குறைதீர வரமருளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. 3

ஈவதுவிலக்காமம்நோய்ப்பிணிகள்வாராமல் யெனைமறலிமணுகாமலே, யிருகமலபாதாரவிந்தமேதந்தெனையெப்போதும் நீயாளுவாய், தாயீன்றபிள்ளையின் நூறுபிழைசெய்யினும் தாயலாதர்பொறுப்பார், தஞ்சமென்றஞ்சலென்று லெனக்காரொருவர் தாரணியில்வேறுமுண்டோ, ஓயாதபொருள்தேவைக்கிலோர் பிள்ளையினாலுண்டுகலைமுற்றமகளே, டுரவாடிவாழலாந் தப்பினால்மூவரும்உடனேகெடுக்க நினைவார்,வாயாரவெண்ணையை உண்ணால்தங்கையே வந்தடுவமகார்மங்கையே வருமடியாகுறைதீர வரமருளும் அதிகாரமதுரைமீனாட்சியுமையே. 4

உற்றவர்கள்பெற்றவர்கள் உறவென்னசுற்றமும் ஒருகோடி
பேரிருந்தும், ஒருகோடிதனமல்ல எழுகோடி பொன்னிருந்
தவுமோ மரலிவருநாள்எற்றேசகாலமும் நின்பாத தெரிசனை
யிடைவிடாதேநினைந்தால், எமனோபிணிகளோ கிரகதோஷங்
களோ எண்டிகைபரந்தோடுமே, பித்தனொடுஅண்டங்கள்கிடுகி
டென நடனமொடு பேச்சியாய்நின்றவ, பேதாதிபேதமா
ய் வல்லுயிர், படைத்திட்ட பிரமனுக், கதிகாரியே, வற்றாத
செல்வமுங் கல்வியுஞ், ஞானமும் வந்திடயெனக்கருளுவாய்,
வருமடியர்குறைதீரவரமருளும்ஆதிகாரமதுரைமீனாட்சியுமையே

ஊனுடம்புக்குள்ளே வாசமொன பதம்விட்டு உபயபதந்
திரமாகவே, உள்ளேந்துபதமும் ஆறு ஆதாரமும், ஓங்காரபீட
மும், பானுவுந்திங்களும் சுழிவட்டமூலைகளும் பங்கயத்தயனு
மாலும், பரமனும் சத்தியும் வெளியொளியுமாக படைத்தவளு
நீயாகுமேதேனூருகனிவாய் திரஞ்செழுத்ததைத் தெளிவாகநீ
யென்க்கு, சித்தம்வைத்தெனைபேரில் பேரினபவாழ்க்கையை
தெளிந்திடஎனக்கருளுவாய், வானுலவுதிங்களணி செஞ்சடில
னொடு நடமாடிவரும்ரூபமயிலே, வருமடியர்குறைதீர வரமரு
ளும் அதிகார மதுரைமீனாட்சியுமையே. 6

எட்டுகிரிமீதினில் யேழுலகம்வைத்து மகம்மேரு வைசி
றுத்திருப்பதுவும் மியலாணபூமிக்கு ளாடுசொசரமுமாம் யிலக்க
கத்தபல்லுயிர்களும், தட்டுவரைவைந்ததும் ஜாதிவிதமானதும்
சமயமாறானவதமும் தாரணிபளந்தமால் நான்முகன் அறமு

கன் தந்திமுகனுணவிதமும் மட்டுலவுலட்சுமிபார்வதிசரஸ்வதி
மாகாளியானவிதமும் வாழ்த்தவேமுடியாது நின்மகிமையான
தை, வளர்சத்திசிவமிரண்டே வட்டத்திலறுகோண மூர்த்தியே
யிமகிரிமடந்தையெனையாளவந்த வருமடியர்குறைதீர வரமரு
ளும் அதிகாரமதுரைமீனாட்சியுமையே 7

எற்பது இகழ்ச்சியாம் இல்லரம் நல்லவாம் ஈவதேபெருமை
யெனவே சிரவலற்கன்ன சொர்னங்கொடுக்கவே ஈஸ்வரியருள்
புரிகுவாய், காற்பதேவிரதமாம் உங்பாததெரிசனை கண்டுதெரி
சனை கண்டுதொழ அறியாதவன் சல்லோஞ்சன் மூஷிகன் சிவ
பூசெயறியாதகஷ்டதுஷ்டக் கபடனான் நாற்பத்துமுக்கோண
சத்தியைபூசித்த நாவினால் துதியாதவன் நானுனக்கடிமையாய்
நீயென்னையாட்கொண்ட நளினத்தையென்சொல்துவேன் வா
ர்பாகளேனமறலி யணுகாமல்ரக்ஷித்துன் மலரடிபதஞ்சேரவே
வருமடியர்குறைதீர வரமருளும் அதிகாரமதுரைமீனாட்சியு
மையே. 8

ஐயாறுமூவேறு அக்ஷரத்துள்ளாகி ஆதியாய்சுழிமுனையு
மாய், அனவரதகண்டமாய்பிண்டமாய் எண்ணங்கு அறம்வளர்
த்திடுதாயுமாய் கையைந்து நாலுவாய்மும்மஜம் செவிகொண்டு
கரிமுகவனொரு கொம்பனைகாங்கயன் பன்னிருகைவேலனைப்
பெற்றிடும் கன்னிபகவதிகுமாரிநீ பையறயணிந்தன் சடையி
லும் கையிலுமி பாகத்தமர்ந்தவளுநீ பதினாலுலோகமும்நிறைந்த

பரிபூரணி பாதபங்கயநாலுமாய் வையகந்தனிலேவருமடியை
தீர்த்துமா வாழ்வளித்திடுவென்னையே வருமடியர்குறைதீரவாம
ருளும் அதிகாரமதுரைமீனாட்சிஉமையே. 9

ஒன்றாகிரெண்டாகி ஒன்றிரண்டொன்றாகி வண்ணமகு
ருருஞானவொளியாய் வளர்வாலை அரிவாகிமுத்திக்கு வித்தா
கிஉடலுக்குள் நீயுமாகிநன்றாக நீரெனக்கன்னையாய் குருவுமா
ய்நானுனக்கடிமையானேன் நரகத்திலவீழாமல் உனகருணைசூழ்
கியே நமனைவெல்லக்கருணைசெய் கன்றினைதேடிவரும்வேளை
கண்டுஅதன சற்றுபிறங்குவதுபோல், கால்தூக்கினடனமிடும்
தியாகரிடபாகத்தில், தங்கினமால்தங்கையே, வருமடியர்குறை
தீரவாமருளும்அதிகாரமதுரைமீனாட்சியுமையே. 10

ஓதவறியேனுன்னைப் பாடவறியேன், ஒருவர்உத்தரம்பே
சவறியேன், உரைக்கின்றமுன்னநூல்கள்நூற்பயன அரிகிலேன
ஓம்நமசிவாயமறியேன, நீதமறியேன சிவபூசையறியேன, குரு
வினயிணையடிவணங்கியறியேன, நெஞ்சினில்தியானிக்க மந்தி
ரமறியேன, பலநேமநிஷ்டைகளுமறியேன, வேதமறியேனு
ருசாஸ்திரமறியேன, உனைவேண்டஅறியாதவனைநீ, மெய்யாக
வேதடுத்தடிமைகொண்டாயுனது விதிசமலபாதமருள்வாய்,மா
தமேபத்தும் சுமந்துபெற்றாய், எனைவளர்ப்பதுஉனக்கருமை
யோ, வருமடியர்குறைதீர வாமருளும், அதிகாரமீனாட்சிஉ
மையே. 11

ஒளவியம்பேசுதல் ஆக்கத்திற்கழகென அறியாதநெஞ்சர் முன்போய்,அருமையுட்பெருமையுங் கொன்னதெல்லாங்கவலை ஆறவதுஎளிதாகுமோ, வெவ்வுயிரையும்படைத் தாம்வளர்ப்பவ ளுக்கு பெளியதொ நவின்னப்பமே, ஏழைபிணிபாரினமேல் பிறவாமல்ஒருமந்திரம் சங்கரி அருள்புரிகுவாய், நவ்வுமவ்வுஞ்ச வ்வுவவ்வு மவ்வுத்தினப்நாவிலேநிற்க அருள்வாய், நாலைந்து இரா கமும் ஒத்திருக்தும்படி நடத்தியேயெனையாளுவாய், நினற பொருள்நீ வருமடியார்குறைதீரவாமருளும் அதிகாரமேதுரைமீ னாட்சிஉமையே. 12

அஃறிணைநடனமிடு பொற்பதத்திசெதங்கைக்குவிரல்கா லாழியும், அனனனடையொத்ததிருபாத பாடகமுடன அணி பெரும்தண்டைகொலுசும், திக்குவொளிவீசுங்கைக் கடகமோ திரஞ் செம்பொனாவிக்கைஅழதம் செங்கதிற்களைந்தும் சாப் பளிபதக்கமும்,சேறமங்கலஞானுடன பக்கமதிலிருதுலைழதொ டுத்தமூக்குத்தியும் பவளவாய்முகத்தினழகும், பங்கயமுகத்தினி டைசெந்தூரம்பிறை, நுதற்பார்வையுங்கூந்தல்முடிமேல் வை க்குமிறைதிருவெண்ணீரணி யெழுந்தருளீசன மனதுக்குள்நீ யிருப்பாய், வருமடியார்துறைதீரவாமருளும் அதிகாரமதுரை மீனாட்சிஉமையே. 13

மீனாட்சி அம்மன்-உயிர்வருக்கமாலை

முற்றிற்று.